18 JUL 2014
EASTERN UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி II 2012/ 2013 (வெளிவாரி)

(மார்ச்/ ஏப்ரல் 2014)

## TL 301 ஈழத்துத் தமிழ் இலக்கியம்

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

1. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை ஈழத்துப் பூதன்றேவனாருடன் ஆரம்பிப்பது எவ்வளவு தூரம் பொருத்தமுடையது? ஆராய்க.

2. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்துத் தமிழ் இலக்கியப் பொருள் மரபு குறித்து ஆராய்க.

3. அ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் பதிப்பு முயற்சிகள் நடைபெற்றமைக்கான காரணங்கள் யாவை? சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.
   ஆ) இக்காலத்து முக்கியமான பதிப்பு முயற்சிகள் பற்றி விளக்குக.

4. அ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்ப் பத்திரிகைகள் தோற்றம் பெற்ற பின்னணி குறித்துத் தெளிவுபடுத்துக.
   ஆ) இப் பத்திரிகைகள் ஈழத்து இலக்கிய வளர்ச்சிப் போக்கில் ஏற்படுத்திய மாற்றங்கள் பற்றிப் பரிசீலிக்குக.

5. "ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் தோற்றம் பற்றி மறு மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது" இக் கூற்றின் பொருத்தப்பாடு பற்றி ஆராய்க.

6. ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் பித்தனுக்குரிய இடம் எத்தகையது? ஆராய்க.

7. எண்பதுகளில் ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சியில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்களுள் ஒன்றினைப் பற்றிப் பரிசீலிக்குக.

8. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

அ) போர்த்துக்கேயர் காலத் தமிழ் இலக்கியங்கள்

ஆ) ஈழத்துத் தமிழ் விமர்சன வளர்ச்சிப் போக்கு

இ) ஈழத்துத் தமிழ்ச் சஞ்சிகையின் தோற்றமும் வளர்ச்சியும் - சுருக்கமான கண்ணோட்டம்

ஈ) 19ம் நூற்றாண்டில் ஈழத்தில் எழுந்த நவீன தமிழ்ப் பிரபந்தங்கள்.

(5x20 = 100 புள்ளிகள்)

*******************************************************************